People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**04.03.2010**

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

மாண்புமிகு முதல்வர், அவர்களுக்கு
மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**15.2.10 முதல் 20.2.10 முடிய இவ்வாரத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர் | 1 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | - |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 41 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 7 |
| 5. | வகுப்பறை வன்முறை | - |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 5 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 6 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | - |
| 9. | கொத்தடிமை | 1 |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | - |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 5 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 3 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | - |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 6 |
| 17. | மணல் கொள்ளை | - |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | 1 |
| 19. | பொதுவானவை | 4 |
| | மொத்தம் | 82 |

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 15. 02.2010 முதல் 20.02.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 462. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த ஆலங்காயம் அருகே உள்ள பெத்தூர் பகுதியைச் சேர்ந்த சாமன்(35) மனைவி ராஜலட்சுமி(35) கணவன் மனைவி தகராறில் ஆத்திரமடைந்த சாமன் அம்மிக்கல்லை போட்டு ராஜலட்சமியை கொன்றதாக சாமண் கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (20.1.10) |
| 463. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** நாட்றம்பள்ளி அருகே ஆந்திராவுக்கு கடத்த முயன்ற 4 டன் ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன்அரிசி கடத்தல் | S.பாஸ்கர் தினமலர் (26.1.10) |
| 464. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அருகே ரேசன் கடைகளில் அதிகாரிகள் நடத்திய சோதனையில் 11 கடைகளில் ரேசன் பொருட்கள் கணக்கில் இருப்பதை விட நூறு கிலோ குறைவாக இருந்ததாக அதிகாரிகள் புகார். | ரேசன் கடைகளில் முறைகேடு | S.பாஸ்கர் தினமலர் (28.1.10) |
| 465. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் சலவன் பேட்டை புண்ணியகோட்டி நகரை சேர்ந்த பழனி(29) மனைவி கீதா(27). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக கீதா புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (29.1.10) |
| 466. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** காட்பாடியில் இருந்து ஆந்திராவிற்கு கடத்த முயன்ற 500 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | S.பாஸ்கர் தினமலர் (30.1.10) |
| 467. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி சென்னாம்பேட்டையில் உள்ள ஒரு பாழடைந்த வீட்டில் பதுக்கி வைத்திருந்த 2–டன் ரேசன் அரிசி மூட்டைகளை அதிகாரிகள் பறிமுதல். | ரேசன்அரிசி கடத்தல் | S.பாஸ்கர் தினமலர் (31.1.10) |
| 468. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** நெமிலி அடுத்த சயனபுரம் பஞ்சாயத்துக்குட்பட்ட கண்டிகை கிராமத்தை சேர்ந்த சேகர்(42) விஷம் குடித்து வேலூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தார். உடலை உடற்கூறாய்வு செய்யாமல் இருக்க மருத்துவமனை ஊழியர் ரூ.5 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக புகார். | லஞ்சம் | S.பாஸ்கர் தினமலர் (31.1.10) |
| 469. | 15.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** தச்சம்பட்டு கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் மகள் சுகந்தி(19) அதே பகுதியை சேர்ந்த வினோத்குமார்(24) திருமணம் செய்வதாக ஆசைவார்த்தை கூறி கர்ப்பிணியாக்கி சுகந்தியை திருமணம் செய்ய மறுப்பு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (31.1.10) |
| 470. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வசந்தாபுரம் இந்திரா நகரை சேர்ந்த முருகன்(35) மனைவி | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கன்னியம்மாள்(30) கணவன் மனைவி குடும்ப தகராறில் கன்னியம்மாள் தூக்குபோட்டு தற்கொலை. | | (1.2.10) |
| 471. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த சத்துவாச்சாரி பகுதியை சேர்ந்த விஜயகுமார் மகள் சுரேகா. கல்லூரியில் பி.எஸ்.சி. 2–ம் ஆண்டு படித்து வந்தார். கல்லூரி சென்ற சுரோகாவை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (3.2.10) |
| 472. | 15.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த நடுவப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேசன் மனைவி ஜெகதா(22), விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினத்தந்தி (3.2.10) |
| 473. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் அரசு மருத்துமனையில் பிறந்து சில மணி நேரங்களே ஆன பெண் குழந்தை சவக்கிடங்கு அருகே கிடந்ததாக புகார். | பெண்சிசுக் கொலை | S.பாஸ்கர் தினமலர் (3.2.10) |
| 474. | 15.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** சேத்துப்பட்டு அருகே உள்ள தேசூர் பழைய காலனியை சேர்ந்த அமுதா.நீதிமன்ற அழைப்பானை கொடுக்க வந்த போலீசுக்கு போண்டாவின் வீட்டை காட்டியதற்காக அமுதாவை போண்டா மற்றும் குடும்பத்தார் தாக்கியதாக அமுதா புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினத்தந்தி (3.2.10) |
| 475. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த ஆலங்காயம் கல்லரைபட்டி கிராமத்தை சேர்ந்த ஜெயபால் மனைவி லாவண்யா, கணவன் மனைவி தகராறில் மனமுடைந்த லாவண்யா 2 குழந்தைகளை கிணற்றில் வீசிக் கொன்றுவிட்டு லாவண்யாவும் கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்றதாக கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (4.2.10) |
| 476. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த மல்லகுண்டா ஆரம்பப் பள்ளியில் சத்துணவு சாப்பிட்ட 80 மாணவ, மாணவிகள், வாந்தி, மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை. | சுகாதாரக் கேடு | S.பாஸ்கர் தினமலர் (4.2.10) |
| 477. | 15.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அடுத்த சனிக்கவாடி கிராமத்தை சேர்ந்த குப்புராவ்(32) மனைவி திலகவதி(20) கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாக திலகவதி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினத்தந்தி (5.2.10) |
| 478. | 15.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** பவித்ரத்தை சேர்ந்த ராணி(25), சரோன் நகர் முன்னாள் ராணுவ வீரரான பவுல்(43) ராணியிடம் டொலிபோனில் ஆபசாமாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் ராணி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (5.2.10) |

| | | | | |
|---|---|---|---|---|
| 479. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** திமிரி அடுத்த நம்பரை கிராமத்தை சேர்ந்த வெங்கடேசன் மனைவி ஜெயந்தி(28) கணவன் மனைவி குடும்ப தகராறில் ஜெயந்தி தீ குளித்து தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (6.2.10) |
| 480. | 15.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி அடுத்த நேத்தப்பாக்கம் காலனியை சேர்ந்த பச்சையம்மாள்(60) தனது மகள் புனிதா வீட்டில் வசித்து வந்தார். மகன் வெங்கடேசன் தாக்கியதாக பச்சையம்மாள் புகார். காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என பச்சையம்மாள் காவல்நிலையம் முன் போரட்டம். | பெண்களுக்கு எதிரான காவல்நிலைய வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (6.2.10) |
| 481. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** பரதராமி அடுத்த அனுபூர் கிராமத்தைச் சேர்ந்த தனபால்(43) மனைவி ஜெயா(40) கணவன் மனைவி தகராறில் ஜெயா தன் தாய்வீட்டிற்கு சென்றார். ஜெயாவின் அம்மா வீட்டிற்கு சென்ற தனபால் ஜெயாவின் அம்மா வேங்கம்மாள்(65)–ஐத் தாக்கியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (7.2.10) |
| 482. | 15.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி டவுன் கொசப்பாளையம் களத்து மேட்டுத்தெருவை சேர்ந்த பலராமன் மகள் தேவி(19) வேலைக்கு சென்ற தேவி காயங்களுடன் கொலை செய்யப்பட்டு கிணற்றில் வீசப்பட்டு உள்ளதாக போலீசார் தகவல். | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (7.2.10) |
| 483. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** பேரணாம்பட்டு அடுத்த ராஜக்கல் கிராமம் கூத்தாண்டவர் நகரை சேர்ந்த குமரன்(24) மனைவி சுமதி(24). கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் சுமதி தூக்குபோட்டு தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (7.2.10) |
| 484. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் அருகே வருவாய் துறையினர் நடத்திய சோதனையில் ஆந்திர மாநிலத்துக்கு கடத்த முயன்ற 11 டன் ரேசன் அரிசி லாரியுடன் பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | S.பாஸ்கர் தினமலர் (8.2.10) |
| 485. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த பெத்தவேப்பம்பட்டு கிராமத்தை சேர்ந்த மணி மனைவி கோவிந்தம்மாள்(70) இவரது மகன் சுப்பிரமணி சொத்து தகராறில் தாய் கோவிந்தம்மாளை தாக்கியதில் கோவிந்தம்மாள் இறந்ததாக மணி கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினகரன் (9.2.10) |
| 486. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** காட்பாடி ரயில் நிலையம், சேர்க்காட்டில் இருந்து ஆந்திர மாநிலத்துக்கு கடத்த முயன்ற 2 டன் ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | S.பாஸ்கர் தினமலர் (12.2.10) |
| 487. | 15.2.10 | **வேலூர் மாவட்டம்:** காட்பாடி குமரப்பா நகரை சேர்ந்த சாம்பால்(26) மனைவி கவுரிசங்கரி(20). கூடுதல் வரதட்சணை கேட்டு | பெண்களுக்கு எதிரான வன்முறை | S.பாஸ்கர் தினமலர் (13.2.10) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதாக கவுரிசங்கரி புகார். | | |
| 488. | 15.2.10 | **ஈரோடு மாவட்டம்:** பவானி அருகே காலிங்கராயன்பாளையத்தைச் சேர்ந்த யுவராஜ் மனைவி கற்பகம், அரசு உயர்நிலைப்பள்ளியில் தாளாளரான ஈஸ்வரமுர்த்தி ஆசிரியர் வேலை தருவதாக கூறி 2 லட்சம் ரூபாய் வாங்கி ஏமாற்றியதாக கற்பகம் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை & பணம் மோசடி | தினமலர் |
| 489. | 15.2.10 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல் மாவட்டம் எஸ்.பி.எம்., பங்களாவில் வசித்து வருபவர் நேரு(43) மனைவி அமலா(23) முதல் மனைவியின் குழந்தைகளான சக்திவேல், ஷாலினியை கொலை செய்ததாக கைது. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 490. | 15.2.10 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி நோதஜி நகரைச் சேர்ந்த குமார்(28) மனைவி பரமேஸ்வரி(26) கணவன் மனைவி தகராறில் பரமேஸ்வரி மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்தாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 491. | 15.2.10 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்துார் தாலுகா அச்சம்தவிர்த்தான் கிராமத்தைச் சேர்ந்த தலித் இளைஞர் பழனிச்சாமியை சர்க்கரை, மாரீஸ்வரன் இருவரும் சேர்ந்து பழனிச்சாமியை சாதியை கூறி திட்டியதோடு அடித்துத் தாக்கியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | முனியராஜ் (RHRC) |
| 492. | 15.2.10 | **மதுரை மாவட்டம்:** கோச்சடையைச் சேர்ந்த லட்சுமணபாண்டியன்(32) மனைவி பவானி, கணவர் மற்றும் குடும்பத்தார் வரதட்சணை கேட்டு துன்புறுத்துவதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 493. | 15.2.10 | **மதுரை மாவட்டம்:** காயிதேமில்லத் நகர் 7வது தெருவை சேர்ந்த பீர்முகம்மது(29) மனைவி பர்வீன்பானு(20) கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்துவதாக பர்பீன்பானு புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 494. | 15.2.10 | **மதுரை மாவட்டம்:** தமிழகத்தில் இருந்து வேலை தேடி மலேசியாவிற்கு சென்ற 40 ஆயிரம் இந்தியர்கள் தலைமறைவாக வாழ்வதாகவும் அவர்களை இந்திய அரசு மீட்டு வரவேண்டும் என அங்கிருந்து தப்பி வந்த நாராயணசாமி புகார். | கொத்தடிமை | தினகரன் |
| 495. | 16.2.10 | **வேலூர் மாவட்டம்:** வாலாஜா தாலுகா தென்கடப்படந்தாங்கலில் உள்ள பொறியியல் கல்லூரி மாணவர் பிரபுநாதன். பிரபுநாதனை கல்லூரியின் துறைத்தலைவர் முருகேசன் சித்திரவதை செய்ததால் பிரபுநாதன் தற்கொலை முயற்சி. | மாணவர்கள் மீதான வன்முறை | S.பாஸ்கர் |
| 496. | 16.2.10 | **மதுரை மாவட்டம்:** மதுரை எஸ்.எஸ்.காலனியில் இறந்த முத்து | காவல்நிலைய வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்பவரது உடலை சுடுகாட்டிற்கு எடுத்து செல்லும் வழியில் இன்ஸ்பெக்டர் ஜெகதீஸ்குமாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வாக்குவாதம். அதில் ஒருவர் திலகர்திடல் காவல் நிலைய ஏட்டு ஜெயராமன் குடிபோதையில் தகராறு. | | |
| 497. | 16.2.10 | **மதுரை மாவட்டம்:** நாகமலைபுதுக்கோட்டை பகுதியில் உள்ள எல்.ஜி.நகரைச் சேர்ந்த லெட்சுமணப்பாண்டி மனைவி பவானி(27) கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்துவதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 498. | 16.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** பாலசமுத்திரம் பேரூராட்சியில் மொத்தம் 700 குடும்பங்கள் உள்ளன. அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த 250 குடும்பங்கள் முப்பது ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். சுடுகாட்டுக்கு செல்ல வேண்டுமென்றால் ஆற்றைக் கடக்கும் அவலநிலை உள்ளதால் பல முறை மனு கொடுத்தும் அரசு நடவடிக்கை எடுக்க வில்லை என புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 499. | 16.2.10 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த போஸ் மனைவி தேவி(45) மகன் மணி(24) அதே தெருவைச் சேர்ந்த கார்த்திக்(24) இருவருக்கும் எற்பட்ட வாய் தகராறில் கார்த்திக் மணி வீட்டிற்குள் புகுந்து தேவியை தாக்கி டிவியை சேதப்படுத்தியதாக தேவி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 500. | 16.2.10 | **தூத்துக்குடி மாவட்டம்:** அம்பேத்கர் நகரைச் சேர்ந்த நாராயணன் மனைவி சுந்தரி(22) கணவன் மனைவி குடும்ப தகராறில் தீ குளித்துத் தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 501. | 16.2.10 | **மதுரை மாவட்டம்:** மேலூர் கொடுக்கம்பட்டியைச் சேர்ந்த கனிமொழி(21) இவரும் பாபு என்பவரும் காதலித்து வந்தனர். பாபு திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக கனிமொழி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 502. | 17.2.10 | **சென்னை மாவட்டம்:** வில்லிவாக்கம் திருநகரை சேர்ந்த சண்முகவர்தினி (24) மீனாட்சி பொறியியல் கல்லூரியில் பேராசிரியையாக பணியாற்றினார். காதலுக்கு பெற்றோர் எதிர்த்தால் கல்லூரியின் 5–வது மாடியில் இருந்து தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 503. | 17.2.10 | **சென்னை மாவட்டம்:** கோடம்பாக்கத்தை சேர்ந்த என்ஜினீயரிங் கல்லூரி மாணவி ரேவதி பிரானேஷ் என்ற மாணவன் ஒருதலையாக காதலித்து உள்ளார். ரேவதி காதலை மறுத்ததால் அவரது காதை பிரானேஷ் அறுத்ததாக கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 504. | 17.2.10 | **கன்னியாகுமரி மாவட்டம்:** மார்த்தாண்டத்தை அடுத்த அருமனை அருகே உள்ள சிதறால் சந்திப்பு பகுதியை சேர்ந்த மேழ்சியதாஸ் மகள் ஷர்மின்(24) ஷாசின்(25) இருவரும் காதலித்து கருத்துவேறுபாட்டால் பிரிந்தனர். திருமணத்துக்கு ஷர்மின் மறுத்ததால் ஆத்திரமடைந்த ஷாசின் ஷர்மினை குத்திக்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 505. | 17.2.10 | **மதுரை மாவட்டம்:** மதுரை சிந்தாமணியைச் சேர்ந்த பால்பாண்டி மனைவி நித்திய கல்யாணி(25) தனது தங்கையின் கணவர் தன்னிடம் தகராறு செய்ததால் மனமுடைந்த நித்யகல்யாணி தீக்குளித்து தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 506. | 17.2.10 | **திருநெல்வேலி மாவட்டம்:** புளியங்குடி பகுதியில் ஆயுதப்படை போலீசார் பூசப்பாண்டி, மாணிக்கராஜ், வேலுச்சாமி வாகனசோதனையில் போது மணல் ஏற்றி வந்த டிராக்டர் டிரைவர் முத்துப்பாண்டியை விசாரித்தனர். இதில் போலீசாருக்கும் ஊர்மக்களுக்கும் ஏற்பட்ட மோதல். 50 குடும்பங்கள் மீது வழக்குப்பதிவு. | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 507. | 17.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** சின்னாளபட்டியில் உள்ள தனியார் பள்ளி விழாவின் போது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்ட தகராறில் ஆசிரியர்கள் போலீசில் புகார். மாணவன் அர்சுணன் போலீஸ் விசாரணையின் போது காவலர்களால் கடுமையாக தாக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார். | காவல்நிலைய வன்முறை | தினமலர் |
| 508. | **17.2.10** | **மதுரை மாவட்டம்: மதுரை செல்லூர் கல்லுமண்டையன் என்ற முருகன், உசிலம்பட்டி கவியரசு, இருவரையும் தெப்பக்குளம் செக்போஸ்ட் அருகே தப்பி ஓட முயன்றதால் சுட்டுக் கொலை. உதவி ஆணையர் வெள்ளைத்துறை தலைமையில் சென்ற குழு போலி என் கவுண்டர் கொலை.** | **காவல் நிலைய வன்முறை** | **தினமலர்** |
| 509. | 17.2.10 | **வேலூர் மாவட்டம்:** சோழிங்கரை அடுத்த ஜம்புகுளம் கிராமத்தில் சரஸ்வதி வேலு பொறியியல் கல்லூரி உள்ளது. கல்லூரியில் அடிப்படை வசதி கோரி போராடிய மாணவர்கள் மீது காவல்துறை தடியடி. | காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 510. | 17.2.10 | **இராமநாபுரம் மாவட்டம்:** கடலில் மீன்பிடிக்க சென்ற ராமேஸ்வரம் மீனவர்களை தனுஷ்கோடி அருகே சிங்கள கடற்படையினர் அடித்து விரட்டியதாக மீனவர்கள் புகார். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 511. | 17.2.10 | **மதுரை மாவட்டம்:** தெப்பக்குளம் மீனாட்சி நகர் பகுதியை சேர்ந்த சுப்பிரமணி மகள் | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேன்மொழி(22) தேர்வில் தோலிவியடைந்ததால் தீக்குளித்து தற்கொலை. | | |
| 512. | 17.2.10 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஜெய்ஹிந்தபுரம் சோலையழகுபுரம் தெருவை சேர்ந்த மணி மனைவி முத்துலெட்சுமி(32) மணி நோய்வாய் பட்டு இறந்துவிட்டதால் மனமுடைந்த முத்துலெட்சுமி தீக்குளித்து தற்கொலை. | வறுமை– பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 513. | 18.2.10 | **மதுரை மாவட்டம்:** கூடல்நகர் கரிசல்குளத்தைச் சேர்ந்த வேணுகோபால் மனைவி திண்டுக்கல்லை சேர்ந்த நதியா என்பவரிடம் வேணுகோபால் பணம் கடன் வாங்கி திருப்பி கொடுக்கவில்லை. ஆத்திரமடைந்த நதியா வேணுகோபால் மனைவி குழந்தைகளை கடத்தியதாக வேணுகோபல் புகார். | கந்துவட்டிக் கொடுமை | தினத்தந்தி |
| 514. | 18.2.10 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே மூனாண்டிபட்டியைச் சேர்ந்த மாரியப்பன்(45) தோட்டத்தில் இருந்த மின்மோட்டாரை ரங்கசாமி திருடியதாக இருவருக்கும் மோதல். மாரியப்பன் உறவினர்களான சங்கரேஸ்வரி, முருகேஸ்வரியை ரங்கசாமி தாக்கியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 515. | 18.2.10 | **இராமநாதபுரம் மாவட்டம்:** சாயல்குடி அருகே இருவேணி பகுதியை சேர்ந்த மைதீன் மகன் முகமது அலி ஜின்னா(19).பள்ளி முடிந்து திரும்பிய தனது மகனை கடத்தியதாக மைதீன் புகார். நகைக்காக கடத்தியதாக மணிகண்டன், முனியசாமி கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 516. | 18.2.10 | **சென்னை மாவட்டம்:** பொழிச்சலூரை சேர்ந்தவர் திருநங்கை ஜோதிகா (எ) ராஜசேகரன்(25). திருநங்கையான தன்னை திருநங்கைகள் பூஜா, ஆயிஷா, கடத்தி சென்று பாலியல் கொடுமைக்கு ஆளாக்கியதாக ஜோதிகா புகார். | திருநங்கைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 517. | 18.2.10 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் அவினாசி ரோட்டில் செயல்பட்ட 'பாசி பாரெக்ஸ் டிரேடிங்' என்ற நிறுவனத்தின் இயக்குனர் கதிரவன் நிதிமோசடி செய்ததாக நிறுவனம் சீல் வைக்கப்பட்டது. மோசடிக்கு உடந்தையாக செயல்பட்ட இன்ஸ்பெக்டர் சண்முகய்யா, மோகன்ராஜ் இருவரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக புகார். | காவல்நிலைய வன்முறை | தினமலர் |
| 518. | 18.2.10 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தனுஸ்கோடி அருகில் ஐந்தாம் மணல் திட்டு கடல்பகுதியில் நிறுவப்பட்டுள்ள மிதவைக்கருவியை கண்காணிக்கும் பணியில் தங்கச்சி மடத்தை சேர்ந்த மீனவர்கள் அகஸ்டின், ரீகன் ஈடுபட்டிருந்தனர். இப்பகுதியில் ரோந்த் வந்த | மீனவர்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இலங்கை கடற்படையினர் கடல் ஆராய்ச்சி மையத்தில் வழங்கப்பட்ட உத்தரவுக் கடிதத்தை காட்டியும் தாக்கியதாக மீனவர்கள் அகஸ்டின், ரீகன் புகார். | | |
| 519. | 18.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** வடமதுரை அருகே ரெட்டியபட்டி முத்தாலம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த தங்கவேல் மனைவி சகுந்தலா(41). தங்கவேல் இறந்துவிட்டார். அ.தி.மு.க., நகர செயலாளரான ராமுத்தேவரிடம் தங்கவேல் கடன்வாங்கியுள்ளார். கடன் திரும்பச் செலுத்த இயலாத நிலை. ராமுத்தேவர் தங்கவேலுவின் ஒரு கோடி ரூயாய் மதிப்புள்ள சொத்தை மிரட்டி அபகரிக்க முயல்வதாக சகுந்தலா புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 520. | 18.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் அருகே தோட்டனூத்து அகதிகள் முகாமை சேர்ந்தவர் விஜயகுமாரி(30) ஞானசுந்தரம்(35). இருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணத்தன்று மாப்பிள்ளை ஞானசுந்தரம் காணவில்லை என விஜயகுமாரி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 521. | 18.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி அருகேயுள்ள பாலசமுத்திரம் பேரூராட்சியில் 1000க்கும் மேற்பட்ட தலித் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பாலசமுத்திரத்தில் ஆற்றை நீந்திக் கடந்து பிணங்களை புதைக்கும் நிலையில் தலித் மக்கள் அவதி. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 522. | 18.2.10 | **திருப்பூர் மாவட்டம்:** பொங்கலூர் ஒன்றியம் கொடுவாயில் தலித்துகளுக்கு முடிதிருத்த செய்ய மறுப்பு. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 523. | 18.2.10 | **மதுரை மாவட்டம்:** ஆரப்பாளையம் வேளாாளர் தெருவைச் சேர்ந்த அய்யாச்சாமி மகள் அஷ்டலட்சுமி(13) தத்தனேரியில் 7–ம் வகுப்பு படித்து வந்தார். பள்ளி சென்றவரை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 524. | 18.2.10 | **மதுரை மாவட்டம்:** பரவையைச் சேர்ந்த மோகன் மகன் அக்னிவேல்(10). உறவினரான செந்தில்(26) அக்னிவேலைக் கடத்தியதாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 525. | 18.2.10 | **திண்டுக்கல் மாவட்டம்:** செட்டியபட்டியைச் சேர்ந்த சங்கத்தேவர் மகன் புகழேந்தி(15) பள்ளி சென்ற மாணவனை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 526. | 19.2.10 | **சென்னை மாவட்டம்:** நிறுவனம் ஐதாராபாத்தில் ராமச்சந்திராபுரம் என்ற இடத்தில் பெல் நிறுவனம் தச்சுப்பிரிவுகளுக்கு பணியாளர்களை தேர்வு செய்தது. இதில் கலந்து கொண்ட தமிழ்நாட்டை சேர்ந்த 800 | இன, மொழி, வெறி சம்பவம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாணவர்களில் 60 சதவீதம் பேர் வெற்றி பெற்றுள்ளனர் என பெல் நிறுவனம் அறிவித்ததை அறிந்த தெலுங்கான மாணவர்கள் தமிழக மாணவர்களை தாக்கியதாக புகார். | | |
| 527. | 19.2.10 | **மதுரை மாவட்டம்:** செல்லூர் தியாகிபாலு 3–வது தெருவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் மகன் வினோத்(16). சில நாட்களாக பள்ளிக்கு சரியாக போகாததால் பெற்றோர் கண்டித்ததால் வீட்டை விட்டு ஓட்டம். பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 528. | 19.2.10 | **மதுரை மாவட்டம்:** திருநகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனையில் சார்பதிவாளர் பாலமுருகன்(44)னிடம் கணக்கில் வராத பணம் பறிமுதல். | லஞ்சம் | தினமலர் |
| 529. | 19.2.10 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடை சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனையில் பத்திர எழுத்தர் ஆறுமுகம் சார்பதிவாளர் சரவணன், உதவியாளர் பாலசுப்ரமணியன் ஆகியோரிடம் கணக்கில் வராத ரூ.28 ஆயிரம் மற்றும் போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. | லஞ்சம் | தினமலர் |
| 530. | 19.2.10 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசாரின் சோதனையில் சார்பதிவாளர் அல்லிஅரசியிடம் கணக்கில் வராத ரூ18 ஆயிரத்து 85 பறிமுதல். | லஞ்சம் | தினமலர் |
| 531. | 19.2.10 | **கோவை மாவட்டம்:** பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்ற லஞ்ச ஒழிப்பு போலீசாரின் சோதனையில் சார்பதிவாளர் பிரகாஷ்சிடமிருந்து கணக்கில் காட்டப்படாத ரூ24 ஆயிரம் பறிமுதல். | லஞ்சம் | தினமலர் |
| 532. | 19.2.10 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செய்யூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய சோதனையில் அலுவலக ஊரியர்களிடமிருந்து கணக்கில் வராத பணம் 17 ஆயிரத்த 500ஐ பறிமுதல் செய்தனர். | லஞ்சம் | தினமலர் |
| 533. | 19.2.10 | **இராமநாதரம் மாவட்டம்:** ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்க சென்ற தமிழக மீனவர்களை கச்சத்தீவு அருகே ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் துப்பாக்கி சூடு நடத்தி வலைகளை அறுத்து மீன் பிடி சாதனங்ளைச் சேதப்படுத்திதோடு மீன்களையும் அள்ளிச் சென்றதாக புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 534. | 19.2.10 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டைச் சேர்ந்த சிபு(38) மனைவி மீனாட்சி (30) சிபுவுக்கும் கண்ணகி(25) என்பவருக்கும் தொடர்பு இருப்பதால் கணவர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் குடும்பதார் கொடுமை படுத்துவதாக மீனாட்சி புகார். | | |
| 535. | 19.2.10 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பத்தூர் அருகே கும்மங்குடிப்பட்டியில் தனியார் கல்லூரியில் படிக்கும் மாணவர் திருவுடையார்பட்டியைச் சேர்ந்த சுந்தரபாரதி(18) விரிவுரையாளர் பூபதிராஜா தாக்கியதால் காயமடைந்த மாணவர் சுந்தரமூர்த்தி தற்கொலை. | கல்லூரி மாணவர் மீதான வன்முறை | தினமலர் |
| 536. | 19.2.10 | **தேனி மாவட்டம்:** போடி அருகேயுள்ள சுந்தரராஜபுரம் பட்டாளம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த பொன்ராம் மகள் சித்ரா(14). அதே ஊரைச் சேர்ந்த மணிகண்டன் (எ) வீரமணிகண்டன்(19) வீட்டில் தனியாக இருந்து சித்ராவிடம் பாலியல் பலாத்காரம் செய்ததாக பெற்றோர் புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்முரசு |
| 537. | 19.2.10 | **மதுரை மாவட்டம்:** கோமதிபுரத்தை சேர்ந்த பாபாபக்ருதீன் மனைவி ரபியாபானு(22) கணவர் கூடுதல் வரதட்சணை பணம் கேட்டு துன்புறுத்தியதால் ரபியாபானு தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 538. | 20.2.10 | **தேனி மாவட்டம்:** உத்தமபாளையம் அருகே சின்ன ஓவுலாபுரம் கிராமத்தை சேர்ந்த குமரேசன்(38)மனைவி தமிழரசி(28) கணவன் மனைவி தகராறில் ஆத்திரமடைந்த குமரேசன் கைத்துப்பாக்கியால் தமிழரசியை மிரட்டல். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 539. | 20.2.10 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல் பள்ளிப்பாளையம் பகுதி விசைத்தறியில் பணிபுரியும் பெண்கள். கந்துவட்டிக்குக் கடன் வாங்கி பிழைப்பு நடத்தும் பெண்கள் கடனைத் திருப்பிக் செலுத்தாததால் பெண்களை பாலியலுக்கு உள்ளாக்குவதும், அதை வீடியோ எடுத்து விற்பனை செய்வதும் நடைபெற்று வருகிறது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |